2. அறிவிப்பு.

மேலவையிலிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவுகள், திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது :—

1. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1981) ;

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1981) ;

3. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட .முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1981) ;

மேலும் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்று பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப் பெற்றுள்ளதாகவும் மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

4. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம் ரத்து) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1981) ;

5. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள் தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1981).

3. ஒழுங்குப் பிரச்சினை.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

** ** ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நான் அனுமதிக்கவில்லை. I am not allowlng·

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.